# கும்மிப்பாட்டு

ரமண குருவின் பாதம் பாடுங்கடி, அதைத் தேடி அங்கே நின்று மகிழ்ந்து ஆடுங்கடி. பெண்களே! கூடி நின்று மகிழ்ந்து ஆடுங்கடி.

1. தான் தங்கும் சிவலோகத்தை விட்டு நீங்கி அன்பின் சொரூபமாக திருச்சுழியில் பிறந்து, அங்கும் இருக்க மனம் விரும்பாமல் திருவண்ணாமலையை நாடி வந்தான்.

2. விரும்பி வருகின்ற அன்பர்களை விருபாக்ஷ குகையில் இருந்து கரும்புபோல் இனிமையான ருசி காட்டி அவர்கள் களிப்புற அருட்பார்வையோடு தரிசனம் தந்தான்.

3. அண்ணாமலையில் ஜோதி வடிவாகத் தோன்றிடும் ஈசனது அருளாலே ஆணவம், காமியம், மாயை முதலியவற்றை அழித்து ஆன்ம சுகத்தில் களித்திடுகின்றான்.

4. எங்கும் நிறைந்த பராபரமாகி, தனக்கென்று ஒரு தனி இடம் ஏதும் இல்லாது, இரவு பகலற்ற இடமான இதய குகையில் தானாகி நின்று களித்தான்.

ஸ்ரீ

# கும்மிப்பாட்டு

ரமண குருபதம் பாடுங்கடி யத்தைத்
தேடிநின் றேரமித் தாடுங்கடி — பெண்காள்
கூடிநின் றேரமித் தாடுங்கடி.

1. தங்குஞ் சிவலோகந் தன்னைவிட் டுத்தய
வாகத் திருச்சுழி தன்னில்வந்து;
அங்கு மிருக்க மனஞ்சகி யாமலே
யருண கிரிதன்னை நாடிவந்தான். (ரமண)

2. விரும்பி வந்திடு மன்பர்க ளைவிரு
பாக்ஷ குகையினிற் றனிருந்து;
கரும்பு போல்ருசி காட்டிக் களித்திடக்
காட்சிதந் தானருட் பார்வையுடன். (ரமண)

3. சோண கிரிதன்னிற் சோதி வடிவதாய்த்
தோன்றிடு மீச னருளாலே;
ஆணவ காமிய மாயை யறுத்தெறிந்
தான்ம சுகத்திற் களித்திடுவான். (ரமண)

4. எங்கு நிறைந்த பராபர மாயொளி
தங்கு மிடமதொன் றில்லாமலே;
கங்குல் பகலற நின்ற விடமதைக்
கண்டு களித்தனன் றுணுகி. (ரமண)

5. பஞ்சபூத வடிவில் உலகில் அவன் எங்கும் நிறைந்துள்ளான். ஆனால் பஞ்ச (அன்ன, ப்ராண, மனோ, விஞ்ஞான, ஆனந்தமய) கோசங்களாகிய தளைகளை அறுத்தெறிந்தான். பஞ்ச தன்மாத்திரைகளை குடித்தான். பஞ்ச இந்திரியங்களைத் தானே வென்றான்.

*5.* *பஞ்சபூ தங்களிற் ருனிருந் தானவன்*
*பஞ்சகோ சங்களைத் தானறுத்தான்;*
*பஞ்சதன் மாத்திரை தான்குடித் தானவன்*
*பஞ்சவிந் தியத்தைத் தான்ஜயித்தான். (ரமண)*

6. மூன்று (ஸ்தூல-சூக்ஷ்ம-காரண) சரீரங்களை மறந்தான். மூன்று (ஜாக்ரத்-ஸ்வப்ன-சுஷுப்தி) அவஸ்தைகளை ஒழித்தான். மூன்று (சத்வ-ரஜஸ்-தமஸ்) குணங்களை தாண்டி மூன்று (சாலோக-சாமீப-சாரூப) பதங்களையும் கடந்து சொரூபத்தில் நிலைத்து விட்டான்.

*6.* *மூன்று சரீரமுந் தான்மறந் தானவன்*
*மூன்றவஸ் தைகளுந் தானொழித்தான்;*
*மூன்று குணங்களுந் தாண்டிவிட் டானவன்*
*மூன்று பதங்கடந் தேறிவிட்டான். (ரமண)*

7. வினைகள் யாவையும் பொடி செய்தான்; பிறைசூடும் தனித்த சிவமாய் ஆனான். மேலும் ஜீவ உயிராகவும், இனிய பரஉயிராகவும் ஆனான்.

*7.* *பின்னும் வினையதுங் காணுண்டி பிறை*
*யோங்கு தனிச்சிவ மாணுண்டி;*
*இன்னுஞ் சீவவுயி ராணுண்டி யினி*
*தாகப் பரவுயி ராணுண்டி. (ரமண)*

8. ஜீவ உயிரையும், பர உயிரையும் சேர்த்து இறுகப் பிடித்து ஒன்றாக்கி எல்லா பாவங்களுக்கும் அப்பாற்பட்ட தன் சுய சொரூபத்தில் நின்று, ஜீவத்வத்தை மறந்து, பரமாக நின்று, பழுத்த தனித்த ஞானியாகி நின்றான்.

*8.* *ஜீவத் துயிரையும் பரத்து யிரையுஞ்*
*சேர்த்திறு கப்பிடித் தொன்ருக்கி;*
*பாவத்தி னின்று தனைமறந் தேபர*
*மாகிப் பழுத்துத் தனித்துவிட்டான். (ரமண)*

9. வீணில் பேச்சை வளர்ப்பதனால் பயனில்லை என்று வேதியனாம்-பகவான் (வேங்கடரமணனான) நீ யார் என்று காண்பாயாக என்றுகூறி தன் கண்களால் என் கன்னத்திலே அறைந்தான்.

*9.* *வீணினில் வாயை வளர்ப்பத னுலென்ன*
*வேங்கட ரமண வேதியனே;*
*காணினிக் காட்சியென் ருேதி யறைந்தானே*
*கண்விழி யாலென்றன் கன்னத்திலே. (ரமண)*

10. ரமணன் என் சத்குரு; ரமணன் என் போதகன். அவனே என் நாயகன் என்று அவன் பாதம் நாடி விழுந்து வணங்கி நாம் நாட்டியம் ஆடுவோம். ஞானப் பெண்களே!

*10.* *ரமணனென் சற்குரு ரமணனென் போதகன்*
*ரமணனென் னுயக னுகிவிட்டான்;*
*நமவென் றவன்பத நாடி விழுந்துநாம்*
*நாட்டிய மாடுவோம் ஞானப்பெண்காள். (ரமண)*